**சுருக்கம்**

கேளிக்கை வரி - 2007 – 08 மற்றும் 2008 – 09 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈடுசெய்யும் நிதியிலிருந்து பெறப்பட்ட வட்டித் தொகையிலிருந்து ரூ.10.00 இலட்சத்தை பண்ருட்டி நகராட்சி விளையாட்டுத் திடலில் அமைந்துள்ள உள்விளையாட்டு அரங்கத்தின் சிமெண்ட் தளத்தினை மரத்திலான தளமாக மாற்றும் பணிக்கு வழஙகுதல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**அரசாணை (நிலை) எண்.152** **நாள் :24.08.2009**

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (நநி4) துறை**

**படிக்கப்பட்டது :**

1) அ.ஆ.(நிலை) எண்.75 ந.நி.(ம) கு.வ.துறை, நாள் 01.06.2007
2) அ.ஆ.(நிலை) எண்.22 ந.நி.(ம) கு.வ.துறை, நாள் 14.02.2008
3) அ.ஆ.(நிலை) எண்.154 ந.நி.(ம) கு.வ.துறை, நாள் 12.08.2008
4) அ.ஆ.(நிலை) எண்.262 ந.நி.(ம) கு.வ.துறை, நாள் 24.12.2008
5) அ.ஆ.(நிலை) எண்.109 ந.நி.(ம) கு.வ.துறை, நாள் 29.06.2009
6) நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம்
ந.க.எண்.49827/2009/ப்பி3,நாள் 19.7.2009

-------

ஆணை:-

தமிழில் பெயர் சூட்டப்படும் அனைத்து தமிழ்த் திரைப்படஙகளுக்கும் முழுவரி விலக்களிக்கப்பட்டதினால் நகராட்சிகள், மாநகராட்சிகள், மற்றும் பேரூராட்சிகள் போன்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடுகட்ட ஒன்றாவது மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணைகளில் 2007–08 மற்றும் 2008–09 ஆண்டுகளில் தலா ரூ.27.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும் அத்தொகையினை முக்கியத்துவம் மற்றும் சிறப்பு வாய்ந்த பணிகளுக்காக பயன்படுத்திக் கொள்ள இரண்டாவது மற்றும் நான்காவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணைகள் மூலம் துறைத் தலைவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்டவாறு அரசு ஒதுக்கீடு செய்யும் நிதி தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் கட்டமைப்பு நிறுவனத்தால் நிர்வகிக்கப்பட்டு வரப்படுகிறது. அவ்வாறு நிர்வகிக்கப்பட்டதில் 2007–08 மற்றும் 2008–09ஆண்டு நிதியான ரூ.54.00 கோடி (ரூ.27.00 + ரூ.27.00) க்கு 31.05.2009 நாளைய தேதியில் ரூ.350 இலட்சம் (ரூபாய் முன்னூற்று ஐம்பது இலட்சம் மட்டும்) வட்டியாக பெறப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட வட்டித் தொகையில் ரூ.340.00 லட்சம் (ரூபாய் முன்னூற்று நாற்பது இலட்சம் மட்டும்) சில பணிகளுக்காக ஐந்தாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2) இந்நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆறாவதாக படிக்கப்பட்டுள்ள தனது கடிதத்தில், பண்ருட்டி நகராட்சி ஆணையர், பண்ருட்டி நகராட்சியில் வார்டு எண்.28, திருநகரில் வார்டு ஏ, பிளாக் எண்.4, ஏ1, 6 ஏ–ல் நகராட்சிக்கு சொந்தமாக பூஙகா

மற்றும் விளையாட்டுத் திடலுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் இறகு பந்து உள்விளையாட்டு அரங்கம் கட்ட ரூ.11.00 இலட்ச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களால் 2005–06 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.5.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், 2005–06 தன்னிறைவு திட்டதிலிருந்து ரூ.6.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும் வழஙகப்பட்டுள்ளது என்றும், மேலும் உள்விளையாட்டு அரங்கத்தில் மின்வசதி மற்றும் தரைத்தளம் அமைக்க ரூ.4.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது என்றும், தற்போது இந்த உள்விளையாட்டு அரஙகத்தின் சிமெண்ட் தளத்திலான 2 மைதானத்தை மாற்றி மரத்திலான தளம் அமைக்க பண்ருட்டி இறகு பந்து சஙகம் கோரியுள்ளது என்றும் இதற்கு ரூ.10.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து மேற்கண்ட தொகைக்கு மான்யம் வழஙகுமாறு கோரியுள்ளதாகவும், இக்கோரிக்கைக்கு நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது என்றும், எனவே 2007–08 மற்றும் 2008–09 ஆண்டுகளுக்கான கேளிக்கை வருவாய் இழப்பீடு ஈடு செய்யும் நிதியிலிருந்து 31.05.09 நாளைய தேதியில் கிடைத்த வட்டித் தொகை ரூ.350.00 இலட்சத்தில் மீதமுள்ள ரூ.10.00 இலட்சத்தை (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) பண்ருட்டி நகராட்சி விளையாட்டுத் திடலில் அமைந்துள்ள உள்விளையாட்டு அரஙகத்தின் சிமெண்ட் தளத்தினை மரத்தினாலான தளமாக மாற்றும் பணிக்கு மானியமாக வழஙகுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3) மேலே பத்தி 2–ல் உள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்த பின், அதனை ஏற்று, கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈடு செய்யும் நிதியிலிருந்து 31.05.09 நாளைய தேதியில் கிடைத்த வட்டித்தொகை ரூ.350.00 இலட்சத்தில் மீதமுள்ள ரூ. 10.00 இலட்சத்தை (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) பண்ருட்டி நகராட்சி விளையாட்டுத் திடலில் அமைந்துள்ள உள்விளையாட்டு அரஙகத்தின் சிமெண்ட் தளத்தினை மரத்தினாலான தளமாக மாற்றும் பணிக்கு வழஙகி அரசு ஆணையிடுகிறது.

4) மேற்படி தொகையை நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு, தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் கட்டமைப்புத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் விடுவிக்க வேண்டும் என்றும், அவ்வாறு விடுவிக்கும் போது மேற்குறிப்பிட்ட பணிக்கான மொத்த தொகையில் 50 சதவிகித தொகையை முன் பணமாகவும், மீதி 50 சதவிகித தொகையை பணி முடிவுற்றவுடனும் வழஙக வேண்டும் என்றும், மேற்குறிப்பிட்ட பணிக்கான நிர்வாக ஒப்புதலை நகராட்சி நிர்வாக இயக்குநரே வழஙகலாம் என்றும், மேற்கொள்ளப்பட்ட பணி குறித்த காலமுறை அறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநரால் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

நிரஞ்சன் மார்டி,
அரசு செயலாளர்

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், டுபிட்கோ,
சென்னை –35.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை– 5.
ஆணையர், பண்ருட்டி நகராட்சி.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை– 5.
மாநிலக் கணக்காயர், சென்னை –18.
உள்துறை தணிக்கை அலுவலர்,
மாநிலக் கணக்காய்வுத் துறைத் தலைவர் அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை– 9

நகல்
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலரின் தனிச் செயலர், சென்னை– 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந II ) துறை, சென்னை 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /**

**பிரிவு அலுவலர்.**